ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,126 வைகாசி மாதம்

# அருட்போர் விரைவு பெறுகிறது!



‘தமிழே இந்துவேதம்’; ‘இந்துவேதமே தமிழ்மொழி’

இந்துமதத்தின்
தலைமை ஆச்சாறிய குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர்
அரசயோகிக் கருவூறார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,126ஆம் ஆண்டின் வைகாசி மாத வெளியீடு.**

***தலைப்பு:*** **“அருட்போர் விரைவு பெறுகிறது!”**

# உள்ளுறை

1. **“இந்துவேத முன்னுரை”** - 25-01-1993ஆம் தேதி திங்கட்கிழமையன்று குருதேவரின் 19வது திருமண நாள் விழாவிற்கு வந்திருந்த அடியார்கள் கலந்து கொண்ட கருத்துப் பரிமாற்ற சிந்தனை அரங்கில் குருதேவர் அருளிய கருத்துக்களையும், செய்திகளையும் தொகுத்த கட்டுரை.
2. **“அருட்போர் விரைவு பெறுகிறது”** - அருட்போரில் பிற்காலச் சோழப் பேரரசின் அரச குடும்பம் முதன் முதலில் பங்கு பெறுகிறது என்று அறிவித்து 31-03-1993இல் குருதேவர் வழங்கிய கருத்துக்கள்.
3. **“இந்துவேதத்தின் பயனும், இந்துமதத்தின் பயனும்”** - தலைமைப் பீடத்திலிருந்து ஆந்திராவில் இருந்த சகோதரர் சுந்தரராமனுக்கு 08-05-1993இல் குருதேவர் கூறி விடுக்கப்பட்ட செயல்படுநிலை விளக்க மடல்.
4. **“பூசாறிகள்தான் இந்நாட்டை தலைமை தாங்கி வழிநடத்த முடியும்”** - புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளருக்கு 11-11-1993இல் குருதேவர் கூறி விடுக்கப்பட்ட விரிவான மடல்.
5. **“கடவுள் வாழ்த்து பற்றி!...”** - 1986இல் பால்குட விழாவின் போது குருதேவர் ஆற்றிய உரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறு பகுதி.

ஓம் குருவே துணை

# <u>இந்துவேத முன்னுரை</u>

*[25-1-1993ஆம் தேதி திங்கட்கிழமையன்று குருதேவரின் 19வது திருமண நாள் விழாவிற்கு வந்திருந்த அடியார்கள் கலந்து கொண்ட கருத்துப் பரிமாற்ற சிந்தனை அரங்கில் குருதேவர் அருளிய கருத்துக்களின் தொகுப்பு.]*

1. 48 வகைக் கடவுள்கள்;
2. 48 வகை வழிபடு நிலையினர்கள்;
3. பதினெண்சித்தர்கள்;
4. 48 வகைச் சித்தர்கள்.

**<u>அருளுலகை ஆள்பவர்கள்</u>** இந்த நால்வர்தான். இவர்களுக்குத்தான் நான்கு வேதங்கள்.

16 சதுர் மறைகள் (4 x 4) என்று ஒரு வாசகம் உள்ளது. இதில் நான்கு (4) என்ற எண் முக்கியத்துவம் கொண்டது.

1) அருளுலகச் செல்வங்கள் நான்கு (4) = மறை, முறை, நெறி, வேதம்.

2) நான்கு (4) மறை;

3) நான்கு (4) முறை. (கரு முறை, குரு முறை, தரு முறை, திரு முறை);

4) நான்கு (4) நெறி;

5) நான்கு (4) நிலம் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்);

**<u>பாலை:-</u>** முட்புதர், குட்டை மரம், முயல், முள்ளம் பன்றி, குள்ள நரி, உடும்பு, மனித நடமாட்டம் இருக்கும். அந்த மனிதர்கள் கொள்ளையடித்து வாழ்பவர்கள். அங்கு வாழ்பவன் பட்டினி கிடப்பவன், அதிகம் தண்ணீர் குடிக்காதவன், அடிக்கடி குளிக்காதவன்; ஆனால் காளியை (கொற்றவையை) கும்பிடுபவன்.

6) கடவுள் வடிவமைப்பு (அ) வாழ்க்கை நிலை நான்கு (4).

கடவுள் வடிவமைப்பு நிலை நான்கு (4). (அருவ நிலை, அருவுருவ நிலை, உருவஅருவ நிலை, உருவ நிலை.)

7) கடவுள்கள் தோன்றும் விதம் - நான்கு (4) வகை; பிறப்பியல் நிலை.

(*சமசுகிருதச் சொல்*) ஜாதி = ஜாத் = பிறப்பு (*தமிழ்ச் சொல்*)

ஜாதி பிறப்பால் வரும் பிரிவினை. இதன்படிப் பார்த்தால் சாதி கடவுள்களுக்கிடையில்தான் உண்டு. மனிதர்களுக்கிடையில் இல்லை.

**ஜாதியைப் பற்றி சித்தர்களுடைய கருத்து:**

ஆதாரம் (Authority) : குரு பாரம்பரியம் = மத வரலாறு => சமய வரலாறு => சாதுக்கள் வரலாறு => அருளாளர்கள் வரலாறு => அருளுலக அறிஞர்கள், புலவர்கள், காவலர்கள் முதலியவர்கள் பற்றிய வரலாறு => அருள் வாழ்க்கை அல்லது மத வாழ்க்கை வாழும் மக்களின் வரலாறு => மதத்தின் தலைவர்களாகிய பதினெண்சித்தர் மடாதிபதிகள், பீடாதிபதிகள் எழுதிய வரலாறு.

இந்தக் குருபாரம்பரியத்தில் ஜாதி என்ற சொல் கலியுகத்தில் தோன்றிய பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் காலத்தில்தான் முதன்முதல் குறிக்கப்படுகின்றது. இவரே, இது பற்றி எழுதுகிறார்:-

“இந்த ஜாதி என்ற சொல் பற்றி இந்துவேத நூல்களிலோ, இந்துமத நூல்களிலோ எந்தக் குறிப்பும் இல்லை. எமக்கு முன் வாழ்ந்த ஒன்பது பீடாதிபதிகளும் சாதுக்கள் என்று அழைக்கப்படும் அருளாளர், முனிவர், இருடி, சன்னாசி (= சன்னிதானத்தின் ஆசி பெற்றவர்கள்) ... முதலியவர்களின் வழித் தோன்றல்களாகத் தோன்றுகிறார்கள் எனும் பொருளில் சாது + ஆதி = சாதி என்ற சொல்தான் வழக்காற்றில் இருக்கிறது. ஆனால், பிறமண்ணினரான பிராமணர் எனும் வட ஆரியர் இந்த சாதி எனும் சொல்லுக்கு நிகராக அல்லது சமமாக தங்களுடைய சனாதன தருமம் எனப்படும்

சமசுக்கிருத வேதமதத்தில் ஜாதி என்ற ஒரு சொல்லை பயன்படுத்தியுள்ளார்கள். இந்த ஜாதி என்ற சொல்தான் பதினெண்சித்தர்களின் தமிழிலுள்ள வேத மதமான இந்து மதத்திலும் செல்வாக்குப் பெற்று விட்டது. ஆனால், இந்த சொல்லுக்குப் பொருள் வேறு.

ஜாதி என்ற சமசுக்கிருத மொழி சொல்லுக்குப் பிறப்பு எனும் பொருள் சொல்லுகிறார்கள். இதன் மூலம் பிறப்பிலேயே பிரிவினைகளைக் கூறுகிறார்கள். இவர்களுடைய கூற்றின்படி *'கடவுளுடைய நெற்றியில் பிறந்தவன் பிரமணன், கடவுளின் தோளில் பிறந்தவன் சத்திரியன், கடவுளின் தொடையில் பிறந்தவன் வைசியன், எதிலும் சேராமல் வழுக்கி கீழே விழுந்தவன் அல்லது காலில் பிறந்தவன் சூத்திரன்" என்று 4 ஜாதிகளைக் கூறுகிறார்கள்.* **இது கேலிக்கூத்தான கருத்து, மடமையான கருத்து, மூடத்தனமான கருத்து, அறிவுக்கு ஒவ்வாத கருத்து**.

**பதினெண்சித்தர்களின் இந்துவேதப்படி கடவுள் ஒருவர் அல்ல. மனிதர்கள் ஒரு கடவுளின் உடம்பின் மூலம் பிறந்தவர்களல்ல. கடவுள்களும் மனிதர்களும் இயற்கையாகப் பிறக்கிறவர்கள்.**

**பிருமணர்களின் சாதிக் கொள்கை இந்துமதக் கொள்கையல்ல. பிருமணர்களுடைய ஹிந்துமதக் கொள்கை. இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.**

**தமிழ்மொழியிலுள்ள சாதி என்பதன் பொருளே வேறு; சமசுக்கிருதத்திலுள்ள ஜாதி என்பதன் பொருளே வேறு.**

அதுவும் சாதி என்ற சொல்லுக்கு உள்ள பொருள் கடவுள்களுக்கு இடையில்தான் இருக்கின்றன. அதுவும் கடவுள்களுக்கிடையில்தான் பிறப்பால் நான்கு (4) வகை இருக்கின்றன.

அதுவும் மனிதர்கள் சாது என்ற அருளாளர்கள் பரம்பரையில் பிறந்ததற்கு ஏற்ப குறிப்பிட்ட சாதுவின் பெயரைச் சொல்லி அவருடைய

சாதியில் வருபவர்கள்: அகத்தியர் சாதி, புலத்தியர் சாதி, புலிப்பாணி சாதி, சட்டைமுனி சாதி, காளங்கிமுனி சாதி, பொன்னுக்கீசர் சாதி, கோரக்கர் சாதி, ... என்று அருளாளர்களின் பெயரைப் போட்டு அவர்களின் பெயரில் வந்தவர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். இதைத் தவிர பிறப்பால் சாதியில்லை.

இப்படி சாதி என்ற சொல் சாதுக்களின் வழி வந்த குல முன்னோர்களைக் குறிக்கத்தான் பயன்படுகிறது.

<u>கடவுள்களுக்கிடையில் சாதி:</u>

பிருமண வேதத்தில் (சமசுக்கிருத வேதத்தில்) கடவுள்களுக்கிடையில் சாதி குறிக்கப்படவில்லை.

பதினெண்சித்தர்களின் தமிழ் வேதத்திலும் கடவுள்களுக்கிடையில் சாதி குறிப்பிடப்பட வில்லை. ஆனால், <u>கடவுள்களை பிறப்பினால் நான்கு (4) வகையாகப் பிரிக்கிறார்கள். இந்தப் பிரிவினைக்கு சாதி என்ற பெயர் இல்லை</u>.

எனவே, இன்றைய இந்துக்களிடையில் பதினெண்சித்தர்கள் இந்து வேதத்தில் 18 வகையான தொழிலின் அடிப்படையில் 'கோயில் குடமுழுக்குப் பூசைவிதி' நூலில் கூறியுள்ள மக்களின் பிரிவுகளை பிருமணர்கள் அவர்களுடைய ஹிந்துமதத்தில் உள்ள சமசுக்கிருத வேதமரபுப்படி பகுக்கப்பட்டுள்ள ஜாதிகளாக ஆக்கிவிட்டார்கள்.

இந்த ஜாதிப் பிரிவினால் இந்துக்களுக்கிடையில் உயர்வு தாழ்வு வெறிகள்; தனித்தனிச் சாதிகளாகப் பிரிந்து வாழும் பிரிவினை உணர்வுகள்; சாதிகளுக்கிடையில் ஒருவரையொருவர் தொடக் கூடாது, பார்க்கக் கூடாது என்ற தீண்டாமைக் கொடுமைகள்; ஒரு சாதியினருக்கும் மற்றொரு சாதியினருக்கும் இடையே திருமண உறவு கூடாது என்ற பிரிவினைத் தடைகள், பிரிவினைக் கொடுமைகள், பிரிவினை வெறிகள், பிரிவினை போட்டாபோட்டிகள், பிரிவினைப் பொறாமை, பிரிவினை உயர்வு தாழ்வு சச்சரவுகள் முதலியவை உருவாகி விட்டன. எனவேதான், <u>விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிசர்களை பிறரோடு</u>

கூடி வாழும் பண்பட்ட மனதைப் பெற்ற மனிதர்களாக மாற்றிய பதினெண்சித்தர்களுடைய இந்துவேத மதமான இந்துமதம்; பிருமணர்களுடைய சூழ்ச்சிகளால் மனிதர்களே மீண்டும் சாதிகளின் பெயரால் மிருகங்களாக மாறும்படிச் செய்துவிட்டது.

**குறிப்பு**:- சாதுக்களில் பதினெட்டு (18) பேர்கள் கோயிலுக்குத் தேவையான பதினெட்டு வகையான தொழில்களேச் செய்பவர்களாக செயல்பட்டிட்டார்கள். அந்த பதினெட்டு சாதுக்களேயும் ஆதியாகக் கொண்டு தோன்றிய பதினெண் சாதியினர் கோயில் குடமுழுக்குப் பூசை நூலில் மிகத் தெளிவாகக் குறிக்கப்படுகிருர்கள். அதாவது, தொழிலின் அடிப்படையில் பதினெட்டு வகைச் சாதிப் பிரிவினர்கள் ஒவ்வொரு கோயிலேயும் சார்ந்து வாழ்ந்தவர்கள். இவர்களே வெளிநாடுகளிலிருந்து வந்த அன்னியரான, அதாவது பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களது சமசுக்கிருத மொழியிலுள்ள வேதத்தில் இருப்பது போல்; அதாவது நான்கு (4) வகைப்பட்ட சாதிகள் (பிருமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன்) இருப்பது போல் பதினெண்சித்தர்களின் இந்துமதத்தில் பதினெட்டு சாதிகள் என்று கூறிவிட்டார்கள். இதை மொழி அறிவு, மொழி ஆராய்ச்சி அறிவு, இந்துவேத அறிவு இல்லாத அப்பாவிப் பாமர மக்கள் அப்படியே நம்பி ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

அதனுல், கடந்த மூன்று யுகங்களாக இந்துமதத்துக்குரிய பதினெட்டு சாதியினர்களுக்கிடையில் நிலவிய சமத்துவம், சகோதரத் தத்துவம், பொதுவுடமை, திருமண உறவுமுறைத் தொடர்பு, இந்துக்கள் என்ற ஒரே பிணைப்பு, இந்துக்கள் என்ற சமுதாயக் கட்டமைப்பு, ... முதலிய அனைத்தும் சிதைத்துச் சீரழிக்கப்பட்டுவிட்டன. பிருமணர்களுடைய சூழ்ச்சியினுல் உருவான பொய்யான ஹிந்துமதப்படி, சித்தர்களின் இந்துக்களும் சாதிப் பிரிவினைகளுக்கும், சண்டை சச்சரவுகளுக்கும், தீண்டாமைக் கொடுமைகளுக்கும், உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற வெறிக்கும் உள்ளாகி விட்டார்கள்”

என்று மிக விரிவான குறிப்புக்களை பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றார். இவர்தான் '<u>பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதமும், பிறமண்ணினரான பிராமணருடைய பொய்யான ஹிந்துமதமும்</u>' என்ற தனித்தனித் தலைப்புக்களிட்டு இரண்டுக்குமிடையே உள்ள வேற்றுமைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

i) இம்மண்ணுலக இயற்கையின்படி வெளிப்பட்ட அருளணுக்களின் மூலம் உண்டான கடவுள்களும், இம்மண்ணுலகுக்கு இயற்கையாகவே அண்டபேரண்டங்களிலிருந்து வந்த கடவுள்களும் "**<u>திருக்கல்</u>**" என்று பெயரிடப்பட்டார்கள்.

ii) இம்மண்ணுலகத்தின் பயிரினங்களிலிருந்து வெளிப்படக் கூடிய அருளணுக்களின் மூலம் தோன்றுகின்ற அல்லது பிறக்கின்ற அல்லது உருவாகின்ற கடவுள்கள் "**<u>தருக்கல்</u>**" எனப் பெயரிடப்படுகிறார்கள்.

iii) உயிரினங்களிலிருந்து வெளிப்படுகின்ற அருளணுக்களின் மூலம் பிறக்கின்ற அல்லது உருவாகின்ற அல்லது தோன்றுகின்ற கடவுள்கள் "**<u>கருக்கல்</u>**" எனப் பெயரிடப்படுகிறார்கள்.

iv) அருளாளர்கள், சித்தர்கள், பதினெண்சித்தர்கள், பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தங்களுடைய அருளாற்றலால் பிறப்பிக்கின்ற அல்லது தோற்றுவிக்கின்ற அல்லது உருவாக்குகின்ற கடவுள்கள் "**<u>குருக்கல்</u>**" என்று பெயரிடப்படுகிறார்கள்.

**<u>பூசைமுறையில் 4 வகை:</u>**

i) **<u>திருமுறை</u>**:- எந்தப் பொருளையும் பயன்படுத்தாமல் தன் விருப்பம் போல் நிருவாணமாக அலைந்து திரிந்தோ அல்லது ஒரே இடத்தில் கையைக் கட்டி காலை மடக்கி உட்கார்ந்திருந்தோ, தவத்தில் ஈடுபட்டோ மனத்தளவில் பூசை செய்து வாழுகின்ற முறைதான் "திருமுறை".

ii) **<u>தருமுறை</u>**:- இயற்கையாக நாட்டில் காணப்படுகின்ற எல்லாவகையான பயிரினங்களின் வேர், கிழங்கு, தண்டு, பட்டை, பூ, இலை, காய், கனி, பழம், தானியங்கள், விதைகள் முதலியவைகளை அப்படியோ அல்லது சமைத்துப் பக்குவப்படுத்தியோ படைத்துப் பூசை செய்யும் முறைக்கு “தருமுறை” என்று பெயர்.

iii) **<u>கருமுறை</u>**:- நாம் உண்ணக்கூடிய நீர் வாழ்வன, தரையில் வாழ்வன, பறப்பன எனப்படும் மீன், நண்டு, ஆமை, உடும்பு, முயல், மான், ஆடு, கோழி, புரு, ... முதலிய உயிரினங்களை பலியிட்டு சமைத்துப் படைத்துச் செய்யும் பூசைமுறை “கருமுறை” எனப்படுகிறது.

iv) **<u>குருமுறை</u>**:- தான் ஏற்றுக் கொண்ட குருவையே எல்லாமாக நினைத்து அவருக்கு அணுக்கத் தொண்டும், பணிவிடைகளும், குற்றேவல்களும் செய்து உற்ற துணையாக வாழ்வதே “குருமுறை” எனும் பூசைமுறை.

இந்த நான்கு வகைப்பட்ட பூசைமுறைகளும் ஒரே வகையான பயனைத்தான் தரும் என்று இந்துவேதம் கூறுகிறது.

இந்த பன்னிரண்டும் (12) பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியால் <u>இந்துமதச் சாரம்</u> என்று கூறப்படுகிறது. அதாவது, கடவுள்களின் பிறப்பு (= 4), வடிவம் (= 4), பூசைமுறை (= 4) மொத்தம் பன்னிரண்டும் “**<u>இந்துமதத்தின் சாரம்</u>**”. இந்தப் பன்னிரண்டுமே இந்துமதத்தின் பிறப்பியலுக்குரிய பன்னிரண்டு இராசிக் கட்டங்கள்.

அதாவது அமராவதி ஆற்றங்கரைக் கருவூரரே “இந்தக் கலியுகத்தில் முதல் பீடாதிபதியாகத் தோன்றியுள்ள யாம் மீண்டும் இந்துமதத்தின் பிறப்பியலை எழுதி அதனுடைய பன்னிரண்டு (12) இராசிக் கட்டங்களையும் குறித்து இந்துக்களின் கையில் ஒப்படைக்கிறோம். இந்த இராசிகளின் பயன்களை அவ்வப்போது கணித்து இந்துமதத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால், இந்து வேதத்தில் ஒரு மனிதனின் பிறப்புக்குரிய பன்னிரண்டு இராசிக் கட்டங்களை எழுதித்தான்

அவனுடைய வாழ்க்கையைப் பற்றி அருட்கணிப்புக்கள் கணித்துக் கொள்ள வேண்டும் என்று விதிமுறை இருப்பது போலவே யாம் இந்துமதத்தைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்துமதத்தின் பிறப்பியலுக்குரிய கட்டங்களையும் போட்டு இந்துமதத்தின் பிறப்பியலை எழுதித் தருகிறோம்” என்று குருபாரம்பரியத்தில் கூறியுள்ளார்.

அன்பே சிவம்.

ஓம் திருச்சிற்றம்பலம்.

இன்று 25-1-1993ஆம் தேதி திங்கட்கிழமையன்று குருதேவரின் 19வது திருமண நாள் விழாவிற்கு வந்திருந்த அடியார்கள் கலந்து கொண்ட கருத்துப் பரிமாற்ற சிந்தனை அரங்கில் குருதேவர் அருளிய கருத்துக்களையும், செய்திகளையும் மேலே தொகுத்து எழுதியுள்ளேன்.

**அன்புடன்**
**குருமார் வெங்கடேசன்.**
**வேம்பை.**
**25-1-93.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல் வேம்படிதாளம் சித்தரடியான் குருமார் திரு வெங்கடேசன் அவர்களின் கையெழுத்திலேயே இருந்தது.//**

ஓம்

நாள்: 31-3-93.

# அருட்போர் விரைவு பெறுகிறது.

## அருட்போரில் பிற்காலச் சோழப் பேரரசின் அரசகுடும்பம் முதன்முதல் பங்கு பெறுகிறது.

இந்துமத ஆண்டு 43,73,094ஆம் ஆண்டு திருமுக ஆண்டு பங்குனித் திங்கள் 18ஆம் நாள் (31-3-1993) புதன்கிழமை (கிழக்கு மண்டலம்) இ.ம.இ. தலைவர் பசும்பொன்னூர் மாவட்டம் இ.ம.இ. பிரிவின் புதிய நியமனம் பெற்ற அருள்மிகு விண்வெளி தேவமோகினி சன்னிதானம் சித்தரடியார் பா. பூபதி, சடையமங்கலம் சுப்பையா அம்பலம் மகன் சேதுராமன் என்ற சேதுக்கு அவரை நேரில் அழைத்து வந்து அருட்கணிப்பு செய்து குருபீடத்திற்கு குருகாணிக்கை செலுத்தி தஞ்சைத் தாத்தாவிடம் அருட்போருக்காகவும், அருளாட்சிப் பணிக்காகவும் கிழக்கு மண்டலத்தில் பசும்பொன்னூர் மாவட்டத்தில் நமது மடத்திற்குரிய பணிகளை முன்னின்று கவனிக்கும் துணையாளராகவும், பாதுகாவலராகவும்; நமது இயக்கங்களுக்கும், கழகங்களுக்கும் உள்ள முதன்மையான தலைவர்களில் ஒருவராகவும் சேதுராமன் என்ற சேது செயல்பட தாத்தாவின் ஒப்புதல் பெறப்பட்டது. **அருளாணை பெற்ற குருவாணை.** குருவாணை வழங்கும் ஓலைநாயக பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களால் வழங்கப்பட்டது.

அப்பொழுது அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தா அவர்கள் நேரில் எழுந்தருளி சேதுராமன் என்ற சேதுவுக்கு அருளுலக பொருளுலக பாதுகாப்புக்களை நல்கி அருட்போருக்கும், அருளாட்சிக்கும்

உரிய முன்னணி வீரத் தளபதிகளுள் ஒருவராக அறிவித்துள்ளார். இதையடுத்துச் சித்தரடியார் பூபதி அவர்கள் குருதேவரிடம் வாழ்த்துப் பெறும் பொழுது; பிற்காலச் சோழப் பேரரசின் மன்னன் சுந்தர சோழனின் மூத்த மகனுகவும், இராசராச சோழன் எனப்படும் அருள்மொழித் தேவனின் அண்ணனுகவும் பிறந்து தஞ்சைத் தாத்தாவின் வளர்ப்பு மகனுகத் தயாரிக்கப்பட்ட ஆதித்த கரிகாலனும், காட்டுமன்னுர் கோயிலில் வெட்டிக் கொலே செய்யப்பட்டு வீரமரணம் பெற்றதால் அழியாத அமரனுக வாழ்வு பெற்ற அந்த ஆதித்த கரிகாலனே நிலவறையிலிருந்து அருவுருவமாக நேரில் கொண்டு வந்து இன்று புதன்கிழமை 31-3-93 மாலே 7:50 மணிக்கு அருளாணே வழங்கு குருவாணே ஓலேநாயகமான குருதேவர், குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் முன்னிலேயில் சித்தரடியார் பூபதியைக் கண்குளிரக் காணச் செய்து இந்த நொடி முதல் அருட்போரின் ஆயத்தப் பணிகளிலும், அருளாட்சி அமைப்புப் பணிகளிலும் நேரடியாகச் செயல்பட ஏற்பாடு செய்திட்டார், அறிவிப்பு செய்திட்டார், அருளாணே வழங்கிட்டார்.

எனவே, இதுமுதல் நம்மவர்கள்

"அருட்பேரரசுக்காக பிற்காலச் சோழ அரச குடும்பத்தில் பிறப்பெடுக்கச் செய்யப்பட்ட ஆதித்த கரிகாலரே! தாங்கள் காட்டுமன்னுர் கோயிலில் சூழ்ச்சிக்கார நயவஞ்சக பிறமண்ணினரால், அன்னியரால் கொலே செய்யப்பட்டு மாண்டதை நினேத்து; மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் எங்களுக்கு தலேமை தாங்கி, வழிகாட்டி, எங்களேப் பாதுகாத்து, அருட்போரை மாபெரும் வெற்றி பெறச் செய்து, மீண்டும் இந்துமத அருட்பேரரசை உருவாக்கிடும்படி செய்ய வேண்டும்.

அருவுருவ நிலேயில் உள்ள தாங்கள் விரைந்து தாத்தாவால் உருவஅருவ நிலேயையும், உருவ நிலேயையும் பெற்று மிக விரைவில்

சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும் குருபீடத்தின் தலைமையின் கீழ் செயல்பட்டு மாபெரும் வெற்றிகளைப் பெற்று அருளாட்சி அமைக்க வேண்டும்.

ஆதித்த கரிகாலரே! எங்களுடைய அருட்கோட்ட பூசையில் கலந்து கொள்க. ஆதித்த கரிகாலரே! எங்களுடைய அனைத்து வகைப்பட்ட நிறுவன நிர்வாகங்களிலும் பங்கு பெறுக! தாத்தா கண்டு வரும் கனவை முழுமையாக நனவாக்கித் தர வருக! வருக! வருக! எங்களுக்கு கனவிலும், நனவிலும், காட்சியிலும், நேரடி உலகியலிலும் சிறந்த துணையாகிடுக! தங்களைப் போற்றுகிறோம், தங்களை வாழ்த்தி வணங்குகிறோம்.

இந்த நொடி முதல் நம்மவர் அனைவரும் புதுத் தெம்பும், தெளிவும், வலிவும், பொலிவும், செயல் ஊக்கமும், செயல் ஆக்கமும், பாதுகாப்பும் பெற்றிட உதவுக! உதவுக! உதவுக!

இதுமுதல் நம் நாட்டு அரச குடும்பங்களில் தங்களைப் போல் பிறப்பிறப்பற்ற அமர வாழ்வு பெற்ற மாவீரர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி அருட்போரிலும், அருளாட்சி அமைப்புப் பணியிலும் ஈடுபடுத்திடுங்கள்! ஈடுபடுத்திடுங்கள்! ஈடுபடுத்திடுங்கள்!"

"இந்த அறிவிப்பு வேண்டுகோள்கள் அருளாட்சி நாயகத்தின் ஒப்புதலோடும், அருளாணை வழங்கு குருவாணை ஓலை நாயகத்தின் அருட் போர்க்கால போர்க்கோல அருளாணை பெற்றுமே விடுக்கப்படுகிறது.

அனைத்து வகையான அருளுலகத்தவர்களோடும், பொருளுலகத்தவர்களோடும் கலந்து செயல்பட்டு அருட்போரை வெற்றியாக்கி அருளாட்சி அமைத்துத் தர தஞ்சைத் தாத்தாவால் அருட்கொடையாக வெளிக் கொணரப்பட்டுள்ள ஆதித்த கரிகாலரே!

சுந்தரத் தேவரின் திருமகளுரே! செயல்பட வருக! செயல்பட வருக! செயல்பட வருக!”

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளைத் திருமாளிகை**

பொன்னேரி திருநகரிலிருந்து இந்த நிகழ்ச்சி அறிவிப்புத் திருவோலை இன்று 31-3-93 புதன்கிழமை முன்னிரவில் வரையப்பட்டு நாடு முழுவதும் அனுப்பப்படுகிறது. இதை எழுதியவர் ஓலைநாயகம் விண்வெளி தேவமோகினி சன்னிதானம் பா. பூபதி.

**குறிப்பு**:- இதற்குச் சத்தியாகப் பயன்படுத்தப்பட்டவர் சித்தர் தேரையர் அவர்களின் மூன்ருவது மகள் சிவசங்கரியாவாள்.

**(ஒப்பம்) தலைவர் குருதேவர்,**
**அந்தணர் அண்ணல்,**
**ஞானச்சாரியார், சித்தர்.**
**31-3-93.**

//உண்மை நகல்//

**நகல் எடுத்தவர்:-** அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் இயக்கப் பெரியவாள், சித்தரடியார் சு. இராசு (நைனு). 31-3-93.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சு. இராசு நைனு அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்துவேதத்தின் பயனும், இந்துமதத்தின் பயனும்

சென்னை - 53,
08-05-93.

அருள்மிகு அன்பு சகோதரர் சுந்தரராமன் அவர்களுக்கு (Alamanda House, Rishi Valley P.O. Chittoor Dt., AP - 517352),

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் இயக்கப் பெரியவாள், சித்தரடியார் சு. இராசு(நைஞ) விடுக்கும் மடல்:

1. தாங்கள் குருதேவருக்கு அனுப்பிய பதிவுக் கடிதம் (Registered Post) - 5-5-93 தேதியிட்டது கிடைத்தது. அவற்றிற்கு குருதேவர் திருவாய் மலர்ந்தருளிய பதிலின் சுருக்கம் இக்கடிதத்தில் எழுதப் படுகிறது.

2. தாங்கள் அனுப்பிய DD கிடைக்கப் பெற்றோம். (ரூ. 2500க்கானது). அதைப் பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளைக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. இப்பணத்தைக் கொண்டு 'கருகுலத்தின்' மேம்பாட்டுக்காகவும் (Improvement) மற்றும் கருகுலத்தின் பராமரிப்புச் செலவுகளுக்காகவும் (maintenance) செலவு செய்யப்படும். இதற்காகவே "பதினெண் சித்தர் மடம் அறக்கட்டளை" (The Pathinen Siddhar Madam Trust) என்ற நிறுவனத்தை அரசாங்கப் பதிவு (Registration) செய்யப்பட்டுள்ளது; அதற்காகப் பணம் அனுப்ப விரும்புகிறவர்கள் பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை (The Pathinen Siddhar Madam Trust) என்று தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பெயரிட்டு 'Draft' அல்லது 'Cheque' பொன்னேரி ஸ்டேட் பேங்க் ஆப்

இந்தியாவில் (State Bank of India, Ponneri) மாற்றிக் கொள்ளத்தக்கதாக அனுப்ப வேண்டும். மேலும், 'பதினெண்சித்தர் திருச்சபை' என்ற பெயரில் 80(G) வருமான வரி விதிவிலக்கு பெற்று ஒரு நிறுவனம் அரசாங்கப் பதிவு பெற்றிருக்கிறது. இந்த நிறுவனங்களுக்கு நன்கொடை தரக்கூடியவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். உங்களின் நண்பர்களிடமும் நன்கொடை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்தால் நல்லது.

**குறிப்பு:-** பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளைக்கு என்று பொன்னேரி இந்திய மாநில வங்கியில் தனிக் கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வங்கிக் கணக்கின் எண் 76/10211 என்பதால் தாங்களும் தங்களுடைய நண்பர்களும் பணத்தை நேரிடையாக அந்தக் கணக்கிற்கே M.T. மூலம் அனுப்பலாம், பலரையும் அனுப்பச் சொல்லலாம்.

3. அன்புச் சகோதரர் சுந்தரராமன் அவர்களே! நம் குருதேவர் அவர்கள் காஞ்சி மடத்துச் சங்கராச்சாரியாரின் நூறாவது பிறந்த தினவிழாக் கொண்டாட்டம் நடக்கும் வேளையில் 'இந்து வேதாகமப் பல்கலைக் கழகம்' (The University of the Hindu Veda Agama) காஞ்சியில் துவக்கப்படுவதால் பதினெண்சித்தர்களால் பாதுகாக்கப்பட்டு வரும் இந்து வேதத்தை முழுமையாக அச்சிட்டு வெளியிட முன்வந்துள்ளார். அதன் பொருட்டு, (i) **'இந்து வேதம்'**, (ii) **'இந்துக்களே! இந்து வேதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்'**, (iii) **'ஓர் இந்துவின் வாழ்க்கை'**, (iv) **'இருக்கு வேதம்'**, (v) **'இந்துவின் பொருள்'**, (vi) **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'**, (vii) **'இந்து முன்னேற்றக் கழகம்'**, (viii) **'இந்து வேத விடுதலை'**, ... முதலிய நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இவற்றை இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கலாம். ஏனெனில், இந்த இந்திய நாடு, இந்து வேத வழியில் இந்துமத அரசாட்சியைக் கொண்டு வர வேண்டுமென்றால், பதினெண் சித்தர்களுடைய இந்து வேத நூல்களும், இந்து மத நூல்களும்தான் உதவ முடியும்; வழிகாட்ட முடியும். எனவேதான், பதினெண்சித்தர்

மட வெளியீடுகளாக, இந்து வேத நூல்களும், இந்து மத நூல்களும் அச்சாகிட இந்துக்கள் அனைவரிடமிருந்தும் உதவிகள் கேட்டு அறிவிப்புக்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

4. நீங்கள் தொடர்பு கொள்ளக் கூடிய நிறுவனங்களுக்கும், தனிமனிதர்களுக்கும், பதினெண்சித்தர் மடத்தின் இந்துவேதப் பணிகளைப் பற்றிக் கூறி தேவையான உதவிகளைத் திரட்டித் தர முயலுங்கள். அது போதும்.

5. சென்னையில் வீடு வைத்திருக்கின்ற, வங்கியில் வேலை பார்க்கும் தங்கள் அண்ணன் கூட பதினெண்சித்தர் மடத்தோடு தொடர்பு கொண்டார். குருதேவர் வழக்கம் போல் பார்க்க மறுத்து விட்டார். ஆனால், பதினெண்சித்தர் மடத்தின் பணிகளுக்கு இயன்ற உதவிகளை அனுப்பினால் ஏற்றுக் கொள்ளப்படும் என்று கூறிவிட்டார்.

6. **இந்துக்களுக்கு இந்து வேதத்தின் பயனும், இந்து மதத்தின் பயனும் பரவலாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக**, பதினெண்சித்தர் மடத்தில் மொழி வேறுபாடின்றி ஆர்வமுள்ள இந்துக்கள் பிறருக்கு மந்தரிப்பதற்காக; மெய்ஞ்ஞானக் கொடி, மயிற்பீலி வழங்கி உரிய பயிற்சியும் வழங்கப்படுகிறது; இந்துக் கோயில்களையெல்லாம் புத்துயிர்ப்புச் செய்வதற்காக சக்கரங்கள் வழங்கப்படுகின்றன. இதேபோல், ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் உதவ வேண்டும் என்பதற்காக வலது கையில் கட்டிக் கொள்ளக் கூடிய மணிக்கட்டுக் கயிறு பெரிய பூசைகளின் மூலம் ஆயிரக்கணக்கில் தயாரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் பூசைச் செலவுக்காக 50 காசு (ஐம்பது காசு) காணிக்கையாகப் பெற்றுக் கொண்டு வழங்கப்படுகின்ற செயல்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**குறிப்பு:-** (அ) எவ்விதப் பாதிப்பும் இல்லாதவர்கள் ஒரே ஒரு கயிறு வலது கை மணிக்கட்டில் கட்டி, அமாவாசை அமாவாசைக்கு

மாற்றிக் கொண்டால் போதும். தேவையான பாதுகாப்பு கிடைக்கும். மாற்றுகிற கயிறை அவர்களே தங்கள் கைப்பட எரித்து விட வேண்டும்.

(ஆ) இன்ன பாதிப்பு என்று புரியாமல் பாதிப்புள்ளவர்கள் தொடர்ந்து 8 நாட்களுக்கு அன்றாடம் ஒரு கயிறைக் கட்டி, குறைந்தது 24 மணி நேரம் கழித்து மறுநாள் காலையில் அவர்கள் கைப்படவே எரித்து விட வேண்டும். இப்படி 8 நாட்களுக்கு அன்றாடம் ஒரு கயிறை மாற்றி வந்தால் சாதாரண பாதிப்புக்கள் அகன்று விடும்.

(இ) கடுமையான பாதிப்பு உள்ளவர்கள் குறைந்தது ஒரு மண்டல காலத்திற்காவது (48 நாட்கள்) அன்றாடம் ஒரு கயிறை கட்டி மறுநாள் காலையில் எரித்து விட வேண்டும்.

7. இந்தச் செயல்திட்டம் பொதுவாக காய்ச்சல், தலைவலி ... முதலிய பாதிப்புக்களுக்கு எல்லா கடைகளிலும் மருந்துகள் விற்பது போல் எல்லாக் கோயில்களிலும், தேவையானால் கடைகளிலும் கூட இந்த முடிகயிறு பொதுமக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

8. நமது இந்துமதத்தின் சிறப்பே எத்தகைய பாதிப்பு வந்தாலும் அதற்குப் பரிகாரமாக முடிகயிறு, தாயத்து, சக்கரம், உருத்திராக்கம், .... முதலியவைகளை மருந்தாகத் தருவதுதான். இதைப் பார்த்துத்தான் மற்ற மதங்கள் கற்றுக் கொண்டன. ஆனால், இந்து மதத்தில்தான் இந்துவேதப்படி மேற்படி அருளூறு பூசனைப் பொருள்களை தயாரிப்பதற்குரிய வழிவகைகள், நெறிமுறைகள், விதிகள் இருக்கின்றன. ஆனால், நமது இந்துக்கள்தான் அப்பாவித்தனமாக, ஏமாளித்தனமாக மாற்று மதத்தவர்களின் சதிகளாலும், இந்துமத துரோகிகளின் சூழ்ச்சிகளாலும், இந்துமத விரோதிகளின் மறைமுக எதிர்ப்பு வேலைகளாலும், இந்து மதத்திற்கே உரிய மந்தரித்தல், பூசை செய்தல்,

திருநீறு, குங்குமம் அணிதல்; தாயத்து, முடிகயிறு, சக்கரம், உருத்திராக்கம், .... முதலியவைகளைப் பயன்படுத்துதல் எனும் அருளுலகப் பாதுகாப்புச் செயல்திட்டங்களை மறுத்தும் வெறுத்தும் புறக்கணித்து ஒதுக்கி விட்டார்கள்! புறக்கணித்து ஒதுக்கி விட்டார்கள்! புறக்கணித்து ஒதுக்கி விட்டார்கள்!

**குறிப்பு:-** இதே போலத்தான் நமது இந்துக்கள்

(i) பிறப்பியல் (சாதகம் - Horoscope),

(ii) வரியியல் (கை ரேகை - Palmistry),

(iii) அங்கவியல் (உறுப்பு இலக்கணம் - A Divine Study of Physical Features of the man);

(iv) பெயரியல் (பேர் இராசி - Nameology)

(v) எண்ணியல் (பிறந்த நாள் கணக்கு, பெயரின் எழுத்துக் கணக்கு, உடன்பிறந்தவர்களின் எண்ணிக்கை, குழந்தைகளின் எண்ணிக்கை, .... முதலியவற்றின் அடிப்படையில் அருட்கணிப்புக் கணித்தல் - The Mystical Study of Numbers => Numerology);

(vi) மனையியல் (ஒருவர் வாழுகின்ற இடத்தின் மண், அந்த வீட்டின் வாசல் எந்த திசையைப் பார்த்து இருக்கிறது, அந்த வீட்டில் என்னென்ன பயிரினங்கள், உயிரினங்கள் வளர்க்கப் படுகின்றன என்ற செய்திகளின் அடிப்படையில் கணிக்கப்படும் அருட்கணிப்பு - The Mystical Study of the Features of the dwelling place or house),

(vii) கனவியல் (கனவுகளின் அடிப்படையில் அருட்கணிப்புச் செய்தல் - The Mystical Study of the Dreams => Dreamology);

(viii) விரிச்சி அல்லது சகுனம் பார்த்தல் (எந்த ஒரு செயலுக்கும் சுற்றுப்புறச் சூழலை வைத்து ஆராய்தல் - The Mystical Study of the Environments and Occurrences (incidents) => Omen) ,...

முதலிய அரிய, கூரிய, சீரிய, பெரிய, நேரிய, வீரிய அருட்கலைகளையெல்லாம் நம் இந்துக்கள் மாற்று மதத்தவர்களாலும், இந்துமத துரோகிகளாலும், விரோதிகளாலும், ஏமாளிப் பண்புகளாலும், .... முழுமையாகப் பயன்படுத்திடத் தயங்கியும், மயங்கியும் வீணாகி விட்டார்கள்! வீணாகிவிட்டார்கள்! வீணாகிவிட்டார்கள்!

9. இந்து மதத்தில் அக்கரையும், ஆர்வமும் கொண்டு இந்துமதத்தின் முதன்முதல் ஆச்சாரியக் குருபீடக் குருதேவரான நமது அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்களின் பதினெண்சித்தர் மடத்தோடு தொடர்பு கொண்டு அவ்வப்போது பொருள் உதவிகள் செய்து வரும் சகோதரர் சுந்தரராமன் அவர்களே! இந்த அஞ்சலில் உள்ள கருத்துக்களை முடிந்தவரை பலமொழிகளில் மொழிபெயர்த்து அறிவித்திடுங்கள், அது போதும்.

நன்றி! வணக்கம்!

அன்பு சித்தரடியார்<br>
சு. இராசு (நைனா),<br>
இயக்கப் பெரியவாள்,<br>
பாரதகால வீடுமாச்சாரியார் திருத்தோன்றல்,<br>
தாயுமானவர் சன்னிதானம்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சு. இராசு (நைனா) அவர்கள் கையெழுத்தில் இருந்திட்டது.//**

# பூசாறிகள்தான் இந்நாட்டை தலைமை தாங்கி வழிநடத்த முடியும்!

ஓம்

தலைமைப்பீடம்,
11-11-93.

உயர்திரு T. மோகன் எம்.எஸ்.சி., (நகராட்சி ஆணையாளர், புதுக்கோட்டை நகராட்சி, புதுக்கோட்டை - 622001) அவர்களின் சமூகத்திற்கு குருபீடத்திலிருந்து விடுக்கும் திருமடல்.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன்களின் திருவருளே!

2) அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் இன்று (11-11-1993) தீவாளியை முன்னிட்டும், திருப்பணிகளை முன்னிட்டும், திருமடத்து நிர்வாகம் குறித்தும், இ.மு.க. (I.M.K.), இ.ம.இ. (I.M.I.), இந்து விடுதலை சிங்கம் (T.I.L.L.), தமிழின மொழி மத விடுதலை இயக்கம் முதலிய நிறுவன நிர்வாகங்களை குறித்தும் சென்னை அம்பத்தூர் வந்து தங்கியுள்ளார். தங்களுடைய 6-11-93ஆம் நாளிட்ட (புதுக்கோட்டை) கடிதம் குருபீடத்திற்கு படித்துக் காண்பிக்கப்பட்டது.

3) தங்களைப் போன்று ஆர்வமுடையவர்கள் கிடைத்தால்:- தமிழின் பெருமையை திருக்குறளும், திருமந்திரமும், சங்க நூல்களும், ஐம்பெரும் காப்பியங்களும், ஐஞ்சிறு காப்பியங்களும்; கம்பராமாயணம், மகாபாரதம், நளவெண்பாவும்; பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்வியப்

பிரபந்தங்கள், சைவசமய சாத்திரங்கள், பட்டினத்தார் பாடல்கள், அருணகிரியார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அருட்கொடை வள்ளல் இராமலிங்க அடிகளார் பாடல்கள், ... முதலியவைகளும் உலகுக்கு விளக்கி வருகின்றன; **ஆனால்**, இவை அனைத்தும் சேர்ந்து தமிழின் அருமை, பெருமை, அரிய தன்மை, இலக்கிய வளம், அறிவுலக சாதனைகள், அருளுலகப் போதனைகள், ... முதலியவைகளை எவ்வளவு தூரம் உலகுக்கு விளக்குகின்றனவோ! அதைப்போல பலகோடி மடங்கு தமிழின் அருமையையும், பெருமையையும், உரிமையையும், கடவுட் தன்மையையும், தெய்வீக சத்திகளையும், அருளுலகப் போதனைகளையும், அறிவுலக சாதனைகளையும் மின்னல் வேகத்தில், புயலின் பெரும்போக்கில், காட்டாற்று வலிமையில், கடல் அலைகள் போன்று தொடர்ந்து ஓயாது உலகுக்கு அறிவிக்கக் கூடிய ஆற்றல் படைத்த இந்து வேதத்தின் முந்நூற்றுத் தொண்ணூற்றாறு (396) நூல்களை, இந்துமதத்தின் முப்பத்தாறு (36) நூல்களை உலகம் அறியச் செய்ய வேண்டும்.

அதற்கு, இந்தியாவின் விடுதலைக்குப் பிறகு இன்னும் உண்மையான தமிழன், இனமான உணர்வுள்ள தமிழன், மெய்யான தமிழ் அறிவுள்ள தமிழன், வாய்மையான தூய்மை நிறை தமிழ்நாட்டுப் பற்றுடைய தமிழன் இதுவரை ஆளவில்லை, ஆளவில்லை, ஆளவில்லை, ஆளவேயில்லை.

இன்னும் சொல்லப் போனால், தமிழகத்தின் சமயத் துறையிலும் சரி, சமுதாயத் துறையிலும் சரி, அரசியல் துறையிலும் சரி, இலக்கியத் துறையிலும் சரி, கலைத்துறையிலும் சரி, தொழில் துறையிலும் சரி; சரி பங்கு தமிழ் உணர்வும், தமிழ் அறிவும், தமிழ் இனப்பற்றும், தமிழ் நாட்டுப்பற்றும் உடைய தமிழன் ஏறத்தாழ ஆயிரமாண்டுகளாக இந்த உலகில் தோன்றவில்லை, தோன்றவில்லை, தோன்றவில்லை, தோன்றவேயில்லை.

4) தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்திற்கும், தமிழ் நாட்டுக்கும், தமிழர் சமுதாயத்துக்கும் தலைவராகத் தோன்றியவர்கள், தோன்றியிருப்பவர்கள் இடையில் உண்மையிலேயே தன்னலமற்ற தத்துவ உள்ளம் உடைய, செயல்சித்தாந்த வாழ்வியலை உடைய தலைவரோ, தொண்டரோ தோன்றவில்லை, தோன்றவில்லை, தோன்றவில்லை, தோன்றவேயில்லை. ஆனால், ஆயிரமாண்டு கால இடைவெளியில் யாரோ ஒரு சிலரை மட்டும் விரல்விட்டு சுட்டிக்காட்டிட சிலர் முன்வருவார்கள், அதில் பயனில்லை. ஏனென்றால் அந்த நல்லவர்கள் தமிழர்களை ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப்படுத்தி, ஒருமைப்படுத்தி, தலைமைதாங்கி வழிநடத்தும் வல்லமை பெற்றவர்களாக செயல்படவில்லை, வாழவில்லை.

5) அதாவது, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களுக்குப் பிறகு தமிழர்களுக்கு முறையான கல்வி அறிவை வழங்கக் கூடிய நிறுவன நிருவாகங்களையும், ஆன்மீகக் குருகுலங்களையும், திருகுலங்களையும், தருகுலங்களையும், கருகுலங்களையும், ஆசிரமங்களையும் நிறுவிச் செயல்படக் கூடிய பேராசான்கள் தோன்றவில்லை. அதுமட்டுமல்ல, அவரைப் போன்று தமிழர்களுக்கு வரலாற்றறிவு, மொழியறிவு, இலக்கிய அறிவு, கலை அறிவு, சமுதாய அறிவு, நாகரிகப் பிடிப்புணர்வு, இனமான உணர்வு, மொழியுரிமை உணர்வு, ... முதலியவைகளையெல்லாம் ஊட்டக் கூடிய தமிழினத் தலைவர்கள் தோன்றவேயில்லை.

இவரின் பாதையிலே அடியெடுத்து வைத்த, விரல்விட்டு எண்ணக் கூடிய தலைவர்கள் மிக விரைவில் தங்களுக்குக் கிடைத்திட்ட புகழ் போதையிலேயே பொருள்வெறியும், தன்னலவெறியும், அகம்பாவ

ஆணவப் போக்கும் மீக்கூரப் பெற்று குறுகிய வட்டங்களுக்குள் நின்று மாயமான செழிப்பையும், விழிப்பையும் தமிழர்களுக்குக் காட்டி பேரழிவையும், பேரிழிவையும் உண்டாக்கிச் சென்று விட்டார்கள். எனவேதான், தமிழர்கள் கண்ணைக் கட்டி காட்டில் விடப்பட்டவர்கள் போல் ஆனார்கள்.

6) தமிழர்களுக்கு ஆன்மீக உணர்வு, மத அறிவு, மதப்பற்று, மத வரலாறு, மதப் பயிற்சி, ... முதலியவைகள் இல்லாமல் போனதால், தமிழர்களின் மூலவர்களான பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுளர்களும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர்களும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர்களும் சேர்ந்து உருவாக்கிய இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும்; அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், கடவுளர் மொழியும், தேவமொழியும், வேதமொழியும், தெய்வமொழியும், ஆண்டவர் மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் எழுதப்பட்டிருந்தும்; அதைத் தங்களுடையவை என்று உரிமை பாராட்டிடவோ, பெருமைப்படுத்திக் கொள்ளவோ தெரியாத அப்பாவிகளாக, புரியாத ஏமாளிகளாக ஆகி விட்டார்கள்.

எனவேதான், தமிழர்கள் தங்கள் சொந்தத் தாய்நாட்டிலேயே அன்னிய நாடுகளில் அன்னியர்களிடம் அடிமைகளாக, கூலிகளாக, எடுபிடிகளாக, வேலைக்காரர்களாக, சுமைதூக்கிகளாக, எழுத்தர்களாக வாழ்வது போல் வாழ நேரிட்டு விட்டது. அதாவது, தமிழனும், தமிழச்சியும் தங்களுடைய தாய்நாட்டிற்கு யார் வந்தாலும், அவர்களுடைய வீட்டைக் கூட்டி, பாத்திரம் தேய்த்து, வீட்டு வேலைகளை செய்யக் கூடிய வேலைக்காரர்களாகவும், வேலைக்காரிகளாகவும் வாழத் தயாராக இருக்கிறார்கள், வாழத் தயாராக இருக்கிறார்கள், வாழத் தயாராக இருக்கிறார்கள்; வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த

அடிமைப் போக்கும், மிடிமை நோக்கும் முடிவுக்கு வர வேண்டுமென்றால்; தமிழனும் தமிழச்சியும் விடிவு பெற வேண்டுமென்றால்; தமிழ் சமுதாயத்திற்கு இனமான உணர்வு, மொழியுரிமை உணர்வு, பண்பாட்டுப் பிடிப்புணர்வு, நாகரிகப் பற்றுணர்வு ஏற்பட வேண்டுமென்றால், ஏற்பட வேண்டுமென்றால், ஏற்பட வேண்டுமென்றால்; **இந்துவேத அறிவு, இந்துவேத சிந்தனை, இந்துமத உணர்வு, இந்துமத வாழ்வு ஒவ்வொரு தமிழனுக்கும் ஏற்பட்டேயாக வேண்டும், ஏற்பட்டேயாக வேண்டும், ஏற்பட்டேயாக வேண்டும்**.

7) இந்து என்ற சொல்லுக்கு தமிழ் என்று பொருள் கூற ஆரம்பிக்கப்பட்டு இருநூற்று நாற்பத்தெட்டு சொற்களுக்கு மேல் அழகிய இனிய பொருளாழமிக்க தமிழ்ச் சொற்களால்தான் இந்துவேதத்தில் பொருள் கூறப்பட்டிருக்கின்றது. **இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் தமிழர்களே தலைவர்கள், மூலவர்கள், காவலர்கள், வாரிசுகள், வித்துக்கள்** என்ற பேருண்மையினை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து கொள்வதற்கு அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அமைத்திட்ட பதினெண்சித்தர் மடம் பீடம் கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம், ஆசிரமம், இந்துவேத ஆகம பாடசாலை, அருட்பணி விரிவாக்கத் திட்டம், இந்துவேத முன்னேற்றக் கழகம், இந்து மறுமலர்ச்சி இயக்கம், தமிழின மொழி மத விடுதலை இயக்கம், சித்தர் கருவூரர் அருட்கோட்டங்கள், இருக்குவேத யாகசாலைகள், அசுரவேத யாகசாலைகள், யாமவேத யாகசாலைகள், அதர்வான வேத யாகசாலைகள், ... முதலிய பல்வேறு வகையான நிறுவன நிர்வாகங்களும்; குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களால் தயாரிக்கப்பட்ட மடாதிபதிகள், பீடாதிபதிகள், சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், பண்டாரம், பண்டார சந்நதி, பண்டார சந்நிதி, அரியவாள், கூரியவாள், சீரியவாள், பெரியவாள், நேரியவாள், வீரியவாள், ஏமகோடிப் பீடம், காமகோடிப்

பீடம், சோமகோடிப் பீடம், வாமகோடிப் பீடம், ஆச்சாரியார்கள், ... முதலிய நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களும் அரும்பாடுபட்டு வருகிறுர்கள்.

8) ஆனுல், ஆனுல், ஆனுல், அரசியல் துறைதான் மக்களிடம் பெரிய சத்தியாக விளங்குகிறது. எனவே, மிக விரைவில் இந்த அரசியல் துறையையும் நமது இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, நிறையக்ஞர், எல்லாம்வல்ல சித்தர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் தம்முடைய சாதனைகளில் ஒன்ருக ஆக்கிக் கொள்ள முடிவெடுத்துள்ளார். அதாவது திருமடங்களும், சாதுக்களும், சாமியார்களும், சந்நியாசிகளும் நேரடியாக அரசியலில் உடனடியாக வந்தேயாக வேண்டும் என்ற இக்கட்டான காலக்கட்டம் வந்து விட்டது. இதை உணர்ந்து அரசியல்வாதிகளும் மதத்தை தடைவிதித்து கூண்டுக்குள் வைக்க முயற்சிக்கிருர்கள், மதத்தை விலக்கி வைக்க நினைக்கிருர்கள், மதத்தில் இருந்து விலகி ஓட விரும்புகிருர்கள்.

**மிக விரைவில் பூசாறிகள்தான் இந்நாட்டை தலைமை தாங்கி வழி நடத்த முடியும்** என்ற பேருண்மை செயலுக்கு வரும். (**The priestly community can alone lead and guide the Nation, Society and all.**) மதம் ஒன்றுதான் மக்களை ஒழுங்காகவும், மேன்மையாகவும், நீதியாகவும் கடமையைச் செய்து வாழச் செய்யும். இந்துவேதம், இந்துமதம்; தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையுமே அதனதனுடைய தனித்தன்மை, விடுதலைத் தன்மை, உரிமை, பெருமை சிதையாமல், சீரழியாமல் ஒன்ருேடொன்று துணையாகி, இணையாகி வாழ்ந்திட வழிவகை செய்கிறது. இதுதான் இந்துமதத்தின் சிறப்பு.

9) இத்தகைய இந்துமதத்தினருக்கு இந்தியாவின் விடுதலைப் போராட்டக் காலத்தில் முசுலீம்களுக்கு 'முசுலீம் லீக்' என்ற ஓர் மத இயக்கம் இருந்தது போல் **இந்து லீக்** என்ற ஓர் இயக்கம் இருக்கவில்லை, இருக்கவில்லை, இருக்கவில்லை. ஆனால், **'இந்து மகாசபை'** என்ற அமைப்பு இருந்தும் கூட அது காங்கிரசு என்ற அரசியல் கட்சியிடம் இந்துமதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைத்து விட்டு ஏமாளித் தனமாக இருந்து விட்டது. அதனால்தான், காங்கிரசு முசுலீம் லீக்கை வளர்ப்பதற்கும், முசுலீம் லீக்குக்கு பாதுகாப்பு தருவதற்கு மட்டுமே பாடுபட்டதே தவிர, இந்து மகாசபைக்காகவோ, இந்து லீக்குகாகவோ பாடுபட வில்லை, பாடுபட வில்லை, பாடுபட வில்லை.

10) இன்னும் சொல்லப் போனால், காங்கிரசு கட்சி தன்னுடைய கட்சி வளர்ச்சிக்காக இந்துமதத்தைப் பலியிட்டது; இந்துமதத்தை காட்டிக் கொடுத்தது; இந்துமதத்திற்கு துரோகம் செய்தது; இந்துமதத்திற்கு விரோதமாக நடந்து கொண்டது. ஆனால், காங்கிரசு கட்சியின் கொள்கையும், அதன் தலைவர்களின் நடைமுறையும், மெய்யான இந்துமத பாதுகாப்பு நோக்கையும் போக்கையும் **பெற்றது போல் இருந்தனர்**. இதுதான் இன்றைக்கும் நடைபெறுகிறது. <u>அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி இந்திய அளவிலும், தமிழகம் என்ற மாநில அளவிலும் வாழக்கூடிய எல்லாவகையான அரசியல்வாதிகளும், சமுதாயவாதிகளும், சமயவாதிகளும், இலக்கியவாதிகளும், கலைத்துறையினரும் **போலியான இந்துமத வாதிகளாகவே** இருக்கிறார்கள்.</u> இதற்குக் காரணம் யாருக்குமே இந்துமதம் தெரியாது, தெரியவில்லை! தெரியாது, தெரியவில்லை! தெரியாது, தெரியவில்லை!

ஏனென்றால், ஏனென்றால், ஏனென்றால், இந்தியாவில் உண்மையிலேயே இந்துமதத் தலைவர்கள் முதல், இந்துமதப் பத்தியாளர்கள் வரை யாருக்குமே இந்துவேதம் தெரியாது, புரியாது! தெரியாது, புரியாது!

தெரியாது, புரியாது! இந்துவேதம் தெரியவில்லை, புரியவில்லை! தெரியவில்லை, புரியவில்லை! தெரியவில்லை, புரியவில்லை! இம்மாபெரும் குறையினை முழுமையாக நீக்கிட, போக்கிட, அகற்றிட முயன்று வருகிறார் இன்றைய பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, கருகுல ஆதீனம், கருமூலப் பண்டாரம், நிறையக்ஞர், நான்குயுக நாயகம், அருட்கொடை வள்ளல், ஞானவேந்தர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்.

இதற்காகவே, இந்துவேத பாடசாலையை துவக்கி இந்துவேதத்தை பயிற்றுவிப்பதற்காக; இந்து வேதத்தை நூல்களாகவும், அறிக்கைகளாகவும், அறிவிக்கைகளாகவும், அருளுரைகளாகவும், அறிவுரைகளாகவும் பல்வேறு வடிவங்களில் வெளியிட்டு வருகின்றார், வெளியிட்டு வருகின்றார், வெளியிட்டு வருகின்றார். அதற்குத் தங்களைப் போன்றவர்களுடைய ஆதரவு தேவை, ஆதரவு தேவை, ஆதரவு தேவை.

11) தங்களைப் போன்றோர் வாய்ச்சொல்லிலாவது அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் பற்றியும், பதினெண்சித்தர் மடம் பற்றியும், இந்துவேதாகமப் பாடசாலை பற்றியும், இந்துமதம் பற்றியும், அருட்பணி விரிவாக்கத் திட்டம் பற்றியும் கூறி ஆதரவு திரட்டுங்கள்; முடிந்தால் உங்களால் இயன்ற சிறு சிறு தொகையாக அனுப்புங்கள்; இன்னும் முடிந்தால் நன்கொடை திரட்டி வழங்குங்கள்; இன்னும் முடிந்தால் உங்களால் இயன்ற அளவு உங்களுக்குரிய ஓய்வுக்கும், வாய்ப்பு வசதிகளுக்கும் ஏற்ப உங்களுடைய உடல் உழைப்பை நல்குங்கள், உடல் உழைப்பை நல்குங்கள், உடல் உழைப்பை நல்குங்கள். இன்னும் முடிந்தால் பலரையும் ஒன்றுதிரட்டி பதினெண்சித்தர் மடத்தின் பணிகளை அணி செய்வதற்குரிய நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களை உங்களுடைய வட்டாரங்களில் தோற்றுவித்து; இந்துவேதம் பரப்பிட,

இந்துமதம் வளர்த்திட, இந்தியாவைக் காத்திட, உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உண்டாக்கிட உதவி செய்யுங்கள்.

12) உலகப் பொதுவேதமான இந்துவேதம் பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புக்களாலும் அவர்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான, அருளூறு தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இருக்கின்றன. இந்தச் செந்தமிழ் மொழியின் 323 எழுத்துக்களில் 247 எழுத்துக்கள் அருளுலக நால்வர்களாக; அதாவது குடும்ப ஆண்டவர்களாக, குலதெய்வங்களாக, கிராமத்து தேவர் தேவதைகளாக, நாட்டுக் கடவுளர்களாக இயங்குகின்றன. மீதி உள்ளதில் 75 எழுத்துக்கள் முத்தீ ஓம்பல், ஐந்தீ வேட்டல், ஏந்தரீகம், தாந்தரீகம் எனும் மூன்று, ஐந்து, எட்டு, பத்து எனும் நான்கு வகைப்பட்ட அருளாற்றலை விளைவிக்கும் சாதனங்களாக இருக்கின்றன. 323ஆவது எழுத்து அனைத்துக்கும் ஆருயிர், ஆவி, ஆன்மா என்ற மூன்றையும் வழங்கவும், மூன்றையும் இணைக்கவும், மூன்றையும் இணைத்துப் பிணைத்து சீவன்களை உண்டாக்கவும், சீவன்களை கூடுவிட்டுக் கூடு சென்று செயல்படவும் வல்லமை பெற்றவையாக இருக்கின்றது.

இப்படியாக நமது கடவுட் தமிழ், தெய்வத் தமிழ், தேவத் தமிழ், வேதத் தமிழ் எல்லாவகையிலும் பிண்டங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்கள் எனும் நான்கையும் இயக்க வல்லமை பெற்றவைகளாக இருக்கின்றது என்பதைப் புரிந்து; **‘தமிழே இந்துவேதம்’, ‘இந்துவேதமே தமிழ்மொழி’** என்பதை உணர்ந்து செயல்படுவதற்கு எல்லாத் தமிழர்களும் ஒன்று திரண்டு, ஒற்றுமைப்பட்டு, ஒருமைப்பட்டு விருப்பாற்றலோடு செயல்பட முன்வர வேண்டும். இதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்களை சந்திக்க சிந்தித்திடுவீர்களாக. ‘நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்ற உணர்வில்

அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்களை ஆன்மீக உலகத்துக்கும், தமிழ் உலகத்துக்கும் அறிமுகப் படுத்திட உங்களுடைய உழைப்பை நல்குவீர்களாகுக! தமிழ்மொழியின் விழிச்சியே! இந்துமத விழிச்சி! தமிழ்மொழியின் செழிச்சியே, இந்துமத செழிச்சி! என்ற பேருண்மையை உணருங்கள், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் காலத்திலாவது இந்துக்கள் எல்லோரும் இந்துவேதத்தைப் பற்றி எண்ணட்டும், ஒவ்வோர் இந்துவும், இந்துவேதத்தைத் தன் உள்ளத்திலும், இல்லத்திலும் பெற்று போற்றிப் பயன்படுத்தி நலம் பெற்றிடும் பொற்காலம் உருவாகட்டும்.

**குறிப்பு:-** தாங்கள் சென்னை வர நேரிட்டால் முன்கூட்டியே அறிவித்து குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியாரைச் சந்திக்க முன் ஒப்புதல் பெற்று சந்தித்திடுங்கள். அது நல்ல ஆக்க ஊக்க பயனை நல்கிடும். தங்களைப் போல் மொழி, இனம், நாட்டு ஆன்மீக உணர்வு உள்ளவர்கள் பதினெண்சித்தர் மடத்தோடு தொடர்பு கொள்ள உதவி செய்யுங்கள்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**அன்பு**
**தலைமைப்பீட எழுத்தர்,**
**சித்தர் யோகமுனி,**
**13-11-93.**

//உண்மை நகல்//

//இதன் மூலநகல்: சித்தர் யோகமுனி திரு சீ. மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//

# கடவுள் வாழ்த்து பற்றி...

இறைவனை வாழ்த்துகிறோம் என்றால், பீடாதிபதி என்ற முறையிலே மட்டுமல்ல! தமிழ் மொழியிலேதான், தமிழர்கள்தான் கடவுள் வாழ்த்து என்று வைத்து இருக்கிறார்கள். கடவுளையே வாழ்த்துகின்ற துணிவு, தெளிவு, சித்தாந்தம் தமிழன் ஒருவனுக்குத்தான் உலகத்திலேயே உண்டு. யாம் இவ்வாறு தெளிவாகக் கூறுவதற்கு காரணம், ஏறத்தாழ உலகில் தோன்றியிருந்த, தோன்றி இருக்கின்ற, ஒருவேளை இனிமேல் தோன்றப் போகின்ற மதங்கள் அனைத்தையும் ... முறையாகவும் நிறையாகவும் பல ஆண்டுக்காலம் ஆய்வுகளை நிகழ்த்தி விட்டு வந்திருக்கிறோம் யாம் என்ற முறையிலே இதைச் சொல்லுகிறோம். ... ... இன்றைக்கு பெரும்பாலும் அரசியலின் பெயரால் பதவிக்கு வரக் கூடியவர்கள், தங்களுக்குத் தெரியாத துறைகளைப் பற்றி, தங்களுக்குப் புரியாத துறைகளைப் பற்றி, தங்களுக்கு அநுபவமே இல்லாத துறைகளைப் பற்றியெல்லாம் பேசக்கூடிய வாய்ப்பு வசதிகளைப் பெற்று விடுகிறார்கள் பதவியின் காரணமாக. அதனால் அவர்கள் ‘எடுத்தோம் கவிழ்த்தோம்’ என்பது போல, அரசியல்வாதிகள் இந்த நாட்டிலே எல்லாத் துறைகளையுமே எப்படி எப்படியோ ஆக்கி வைத்து இருக்கிறார்கள். ஆன்மீகத் துறையை, அருள் துறையை, அகவாழ்வுத் துறையை, ... இறப்புக்குப் பிறகு என்ன இருக்கிறது என்று சொல்லக் கூடிய இந்த வாழ்வியல் துறையை, இந்த பிறப்புக்கும் முந்தியது என்ன என்பதைப் பற்றிச் சொல்லக் கூடிய வாழ்வியல் துறையை இந்த அரசியல்வாதிகள்: நான் உவமானமாகக் கூற நினைத்தால் - யாரும் தவறாக நினைக்க வேண்டாம் - கந்தல் துணி, பழம் கந்தல் துணியை குட்டி நாய் கடித்துக் குதறினால் எப்படி இருக்குமோ, அதுபோலத்தான் அரசியல்வாதிகள் நம் மதத்துறையைக் கடித்து, குதறி, சிதைத்து, பிய்த்து எறிந்து வைத்து இருக்கிறார்கள். ... ... ...

**//1986இல் பால்குட விழாவில் குருதேவர் ஆற்றிய உரையின் ஒரு சிறு பகுதி.//**








11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

“இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் தமிழர்களே தலைவர்கள், மூலவர்கள், காவலர்கள், வாரிசுகள், வித்துக்கள் என்ற பேருண்மையினை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து கொள்வதற்கு அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அமைத்திட்ட பதினெண்சித்தர் மடம் பீடம் கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம், ... முதலிய பல்வேறு வகையான நிறுவன நிர்வாகங்களும்; குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களால் தயாரிக்கப்பட்ட சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், ... முதலிய நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களும் அரும்பாடுபட்டு வருகிறார்கள்.”

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-